



தூத்துக்குடியில் வடகிழக்கு பருவமழை பெய்து வருவதை முன்னிட்டு 2வது நாளாக, தூத்துக்குடி மாநகரம் திரேஸ்புரம் பகுதி 8வது வார்டுக்கு உட்பட்ட முத்தரையர் நகர், மாதவ நாயர் காலனி 16 வது வார்டு P&T காலனி 14 வது தெரு, கோக்கூர் உள்ளிட்ட இடங்களில் தாழ்வான பகுதிகளில் தேங்கியிருந்த மழை நீரை வெளியேற்ற சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான பெ.கீதாஜீவன் உடனடியாக நடவடிக்கை எடுத்ததுடன், இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அப்பகுதி மக்களை நேரில் சந்தித்து கலந்துரையாடினார். இந்த நிகழ்வின்போது மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், பகுதி செயலாளர் நிர்மல்ராஜ், மாமன்ற உறுப்பினர் பவானி, வட்ட செயலாளர் ரவிச்சந்திரன், வட்ட பிரதிநிதிகள் மார்ஷல், ஆறுமுகம், திமுக சிறுபான்மையினர் அணி நிர்வாகி நிக்கோலஸ் மணி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.





தி.மு.க. மாற்றுத்திறனாளிகள் அணியின் சார்பாக அதன் மாநிலத் தலைவர் ரெ.தங்கம் பண்டிகை காலத்தை முன்னிட்டு தனது சொந்த செலவில் 500க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு, தூய்மை பணியாளர்களுக்கும் புத்தாடைகள் மற்றும் இனிப்பு பெட்டகங்களை வழங்கினார். தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில நிர்வாகிகள் பா. சந்தானகிருஷ்ணன், க.இளங்கோவன்,பா. சக்திவேல், பட்டுக்கோட்டை வீர.சரவணன், வேளச்சேரி பத்மநாபன், மலர்க்கொடி, அமுதவல்லிசார்லஸ், ரவிச்சந்திரன், மற்றும் ஏராளமான நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# புழல் ஏரியில் இருந்து உபரிநீர் திறப்பு!

## நீர் வளத் துறை அதிகாரிகள் தகவல்!

புழல், அக். 22-

வடகிழக்கு பருவமழை தொடங்கிய நிலையில் புழல் ஏரியில் இருந்து கடந்த 15ம்தேதி முதல் உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்தநிலையில், தொடர் கனமழை காரணமாக ஏரிக்கு வரும் நீர்வரத்து அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் புழல் ஏரியில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, புழல் ஏரியில் இருந்து காலையில் 300 கன அடியாக திறக்கப்பட்டு வந்த உபரிநீர் தற்போது 500 கனஅடியாக அதிகரிக்கப் பட்டுள்ளது. புழல் ஏரிக்கு நேற்று 36 கன அடியாக இருந்த நீர்வரத்து இன்று 72 கன அடியாக அதிகரித்துள்ளது. 3300 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட புழல் ஏரியில் நீர் இருப்பு 2732 மில்லியன் கனஅடியாக உள்ளது. 21.2 அடி உயரம் கொண்ட புழல் ஏரியில் 18.61 அடி உயரத்திற்கு தண்ணீர் நிரம்பியுள்ளது.

புழல் ஏரியில் இருந்து வெளியேற்றப்படும் உபரி நீர் சுமார் 13.5 கி.மீ கால்வாய் வழியே எண்ணூர் கடலில் சென்று கலக்கிறது. நாரவாரிகுப்பம், வடகரை, கிராண்ட்லைன், சாமியார் மடம், தண்டலகழனி, பாபாநகர், வடபெரும்பாக்கம, வடகரை, மணலி மற்றும் கொசப்பூர் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட ஊர்கள் வழியாக உபரிநீர் செல்ல உள்ளதால் கால்வாய் ஓரங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தி உள்ளார்.

நீர்வரத்துக்கு ஏற்ப ஏரியில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீர் அளவு பராமரிக்கப்படும் என நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர் அக்.22-

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் கும்பகோணம் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க. அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

நாளை (23.10.2025 - வியாழக்கிழமை) காலை 10:00 மணியளவில் கும்பகோணம், தஞ்சை வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அவைத் தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற உள்ளது.



அதுசமயம் கூட்டத்தில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டத்தின் பொருள்:

1.வரும் 28.10.2025 செவ்வாய்க்கிழமை, மாமல்லபுரம், ஈ.சி.ஆர். சாலையில் உள்ள "கான்ஃப்ளுயன்ஸ் ஹால்" (Confluence Hall)ல் நடைபெறவுள்ள தமிழ்நாடு தலைகுனியாது "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பயிற்சிக் கூட்டத்தில் கலந்து கொள்வது குறித்து.

2. துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா.

3. SIR (Special Intensive Revision) வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு வர உள்ளதால் இல்லம் தோறும் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்து.

4. கழக ஆக்கப் பணிகள்.

குறிப்பு: ஒன்றிய பகுதி பேரூர் கழக செயலாளர் கூட்டத்திற்கு வரும்போது ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை படிவம் மற்றும் BLA2 & BLC புத்தகத்தை மாவட்ட கழகத்தின் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

## மாதவரம் வடக்குப் பகுதி

# 17வது வட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## புழல் எம்.நாராயணன் முன்னிலையில் மண்டல அலுவலர் தேவேந்திரன் – கே.கருணாகரன் பணிகளை துரிதப்படுத்தினர்!

மாதவரம், அக். 22 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 17 ஆவது வட்டம் கொசப்பூர் தியாகி விஸ்வநாத தாஸ் நகர் பகுதியில் பெய்து வருகின்ற வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு பணிகளை செய்ய படுத்தினார்.

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் கொசப்பூர் தியாகி விஸ்வநாததாஸ் நகர் பகுதியில் அமைந்துள்ளது சுபம் குடியிருப்பு. இந்த பகுதியில் வசிக்கும் கலைச்செல்வி என்பவர் தன்னுடைய வீட்டிற்கு செல்லும் வழியிலும் குடியிருப்பு பகுதியில் மழைநீர் சூழ்ந்துள்ளது. இதை உடனடியாக சரி செய்து தர வேண்டும் என்று மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் அவர்களிடம் கோரிக்கை மனு வைத்தார். கோரிக்கையின் அடிப்படையில் மேற்படி தகவலை மண்டலம் 2 பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர் தேவேந்திரன் அவர்களுக்கு, புழல் நாராயணன் அவர்கள் கொடுத்த தகவல் அடிப்படையில், வட்ட செயலாளர் கே. கருணாகரன், சி. மூர்த்தி, பாக முகவர் டி. திவாகர் ஆகியோருடன் நேரில் சென்று மேற்படி இடத்தை பார்வையிட்டு மழை நீர் வடிய டிராக்டர் கொண்டு தண்ணீரை வெளியே அடித்தனர். ஆனால் தண்ணீர் வடிய நேரமாக

இருந்த காரணத்தினால் சுபம் காலனி சாலையை ஜேசிபி இயந்திரம் மூலம் பள்ளம்வெட்டி 20 அடி நீளமுள்ள பைப்பை நிறுவி மழை நீரை வெளியேற்றி வழிவகை செய்தனர்.

தகவல் தெரிவித்த சில மணி நேரங்களிலேயே சுபம் குடியிருப்பு பகுதியை சூழ்ந்து இருந்த மழைநீர் மழைநீர் இயந்திரங்கள் மூலம் வடியவைத்தும் பின் சாலையை பள்ளம் எடுத்து உடனடியாக குழாய் அமைத்து மழை நீரை வெளியேற்றிய அதிகாரிகளுக்கு தங்களுடைய நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள்.

பொதுமக்களின் குறையை உடனுக்குடன் மழை நீர் வடிய வைக்க நடவடிக்கை மேற்கொள்ளும் திராவிட மாடல அரசின் முதலமைச்சர் கழகத் தலைவர் மு. க ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும் 17 வது வட்ட பொதுமக்கள் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

# பவானிசாகர் அணையில் உபரிநீர் திறப்பு!

பவானி, அக். 22 -

ஈரோடு மாவட்டத்தில் கோபி, சத்தி, கவுந்தப்பாடி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பெய்த கனமழையால் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த ஒரு வார காலமாக பவானி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் இரவு நேரங்களில் கனமழை பெய்து வருகிறது. அதனால், தடுப்பணைகள் ஆங்காங்கே நிரம்பி உபரி நீர் வெளியேறி பவானி ஆற்றில் கலந்து வருகிறது.

பவானிசாகர் அணையும் நிரம்பியதால் நேற்று இரவு முதல் உபரி நீர் ஆற்றில் திறக்கப்பட்டது. இதனால் பவானி காலிங்கராயன் அணைக்கு நேற்று முன்தினம் 5,400 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 6 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்த நிலையில் இரவு விநாடிக்கு 14 ஆயிரம் கன அடியாக உயர்ந்தது. இன்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து 6,800 கன அடியாக உள்ளது.

பவானிசாகர் அணையிலிருந்து திறக்கப்பட்ட உபரி நீருடன், மழை நீரும் சேர்ந்து வருவதால் நீர்வரத்து மேலும் உயரும் என கருதப்படுகிறது. பவானி காலிங்கராயன் அணைக்கட்டிலிருந்து உபரி நீர் காவிரி ஆற்றில் சென்று கலந்து வருகிறது. நீர்வரத்து நிலவரத்தை நீர்வளத் துறை உதவிப் பொறியாளர் குமார் மற்றும் அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.



தாம்பரம் தொகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகளுக்கும் கழக தோழர்களுக்கும் விழாக்காலத்தை முன்னிட்டு தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் தாம்பரம் மாநகரம் சார்பாக பரிசு வழங்கப்பட்டது. உடன் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, பகுதி கழக செயலாளர் டி.காமராஜ்,எஸ்.இந்திரன், எஸ்.சேகர், இரா.சுரேஷ், ஆ.நடராஜ், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞரணி, மாணவரணி, தகவல் தொழில்நுட்ப அணி,மகளிர் அணி மற்றும் கழக தோழர்கள் இருந்தனர்.

# தமிழ்நாட்டில் பருவமழை இயல்பை விட 59 சதவிகிதம் அதிகம் பெய்துள்ளது!

## வானிலை ஆய்வு மையத் தலைவர் பேட்டி!

சென்னை, அக்.22-

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி இது வரை இயல்படை விட 59 சதவீதம் மழை பதிவாகி உள்ளதாக வானிலை ஆய்வு மையத் தலைவர் அமுதா கூறியுள்ளார்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் வானிலை ஆய்வு மைய தென்மண்டலத் தலைவர் அமுதா செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி இதுவரை இயல்பை விட 59 சதவீதம் மழை பதிவாகி உள்ளது. தமிழகத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 22 இடங்களில் கனமழை பதிவாகி உள்ளது. தெற்கு அந்தமான் பகுதிகளில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. அரபிக்கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி நாளை காற்றழுத்த மண்டலமாக மாற வாய்ப்பு உள்ளது. ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறுமா என நாளை கூற முடியும். ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி நாளை மேற்கு திசையில் நகர்ந்து வட தமிழகம் அருகே மண்டலமாக வலுப்பெறும். சென்னையில் இருந்து 400 கி.மீ தொலைவில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி நிலவுகிறது. ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் உடனடியாக கரைக்கு திரும்ப அறிறுவுத்தப்பட்டுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 4 இடங்களில் அதிகனமழை பெய்துள்ளது. ராமநாதபுரம் தங்கச்சி மடத்தில் 17 செ.மீ. மழை பதிவாகி உள்ளது. சென்னையில் அதிகபட்சமாக மேடவாக்கத்தில் 10 செ.மீ மழை பதிவாகி உள்ளது. 10 மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு, 7 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது.

அக்.1 முதல் அக்.21 வரை தமிழகத்தில் பதிவான மழையின் அளவு 16 செ.மீ ; இயல்பு 10 செ.மீ. 16 மாவட்டங்களில் இயல்பு, இயல்பை விட மிக அதிகமாக கனமழை பதிவாகி உள்ளது. சென்னையில் மிக கனமழைக்கு வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# புதுச்சேரி, காரைக்கால்பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிப்பு!

புதுச்சேரி, அக். 22 -

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து இருக்கிறது. இதன் காரணமாக பெரும்பாலான மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. வரும் 24ந்தேதி வரை தமிழ்நாட்டில் அனேக இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. இதனால் புதுச்சேரி மற்றும் காரைக்காலில் இன்று அதி கனமழைக்கான ரெட் அலர்ட் விடுக்கப்பட்டது.

மேலும் புதுச்சேரியில் அதிகனமழை பெய்வதற்கான ரெட் அலர்ட்,விடுக்கப்பட்டது.

மேலும் புதுச்சேரியில் இன்று (அக் .22) அதிகனமழை பெய்வதற்கான ரெட் அலர்ட், காரைக்காலில் நாளை கனமழை பெய்வதற்கான ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டது. இந்நிலையில் கனமழை எச்சரிக்கை காரணமாக புதுச்சேரி, காரைக்காலில் உள்ள பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று (அக் .22) விடுமுறை அளித்து கல்வித்துறை அமைச்சர் நமச்சிவாயம் உத்தரவிட்டுள்ளார்.



திருவொற்றியூர் மேற்குப் பகுதியில் அப்பு (எ) டாக்டர் எஸ்.சிவராமன் ஏற்பாட்டில் ராமநாதபுரம் பகுதியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு நல உதவிகள் வழங்கப்பட்டது. இதில் ஏ.ஜி. தேவராஜ், விக்கி, விஜய், காந்தி, ராஜேஷ், சி.காமராஜ், எச்.ஜெகன், மனோஜ் தங்கராஜ், ஜி. சுரேஷ், கே.ரவி குமார், ஆர்.சரத் குமார், எம்.இரவி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.